மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண். 55 /2015

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.3.

---

பெயர். – திரு.செல்லப்பாண்டி

த/பெ. – திரு.ராசா என்ற கருப்பசாமி

கிராமம் – திருமங்கலக்குறிச்சி

தொழில் – விவசாயம்

தாலுகா – கயத்தார்

வயது – 53.

1872–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 19–ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.–

1) நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 3 வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை வாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 23.11.1936–ல் சுப்பிரமணியன் அவருடைய சகோதரருடன் பிறப்பித்துக்கொண்ட பதிவு பாகப்பிரிவினை ஆவணம் சப்ரி நகல் வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 5 ம்பிரதிவாதி தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 02.07.1981–ல் மாணிக்கவாசகம் பிள்ளை அவரது தாயார் சிதம்பரத்தம்மாள் ஆகியோர்கள் செல்லச்சாமி என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 5 ம் பிரதிவாதி தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது*

*(ஒப்பம்)சி.கருப்பசாமி,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*19.01.2026.*